# மே தினம் - உழைக்கும் மக்கள் தினம்

(மேதின வரலாறு பற்றிய சிறு குறிப்பு)

அமெரிக்காவில்1832இல் பொஸ்டனில் கப்பலில் பணியாற்றிய தச்சுத் தொழிலாளர்கள் 10 மணிநேர வேலை என்னும் கோரிக்கையை முன்வைத்து வேலைநிறுத்தம் செய்தனர், அதேபோல் 1835இல் பிலடெல்பியாவிலும் பென்சில்வேனியாவிலும் இதே கோரிக்கையை முன்வைத்து இயக்கம் நடத்தப் பட்டது. பென்சில்வேனியாவில் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களும் இரயில்வே தொழிலாளர்களும் குறைவான வேலை நேரத்தை வலியுறுத்தி 1877இல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதைத் தொடர்ந்து அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள தொழிலாளர் இயக்கங்களை இணைத்து அமெரிக்க தொழிலாளர் கூட்டமைப்பு என்ற இயக்கம் உருவாக்கப்பட்டது. இவ்வியக்கம் 8 மணிநேர வேலை என்ற கோரிக்கையை முன்வைத்து, தொடர்ந்து இயக்கங்களை நடத்தியது. அத்தோடு மே 1 1886, அன்று நாடு தழுவிய வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்தது. இவ்வியக்கமே மே தினம் பிறப்பதற்கு காரணமாகவும் அமைந்தது.

தொழில் நகரங்களான நியூயார்க், சிகாகோ, பிலடெல்பியா, மில்விக்கி, சின்சினாட்டி, பால்டிமோர் என அமெரிக்கா முழுவதும் 3,50,000 தொழிலாளர்கள் பங்கேற்ற மாபெரும் வேலைநிறுத்தம் துவங்கியது. இவ் வேலைநிறுத்தத்தில் 1200க்கும் மேற்பட்ட நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். தொழிலாளர்களின் எழுச்சி மிக்க வேலைநிறுத்தத்தினால், அமெரிக்க பெருநிறு வனங்கள் மூடப்பட்டன. இரயில் போக்குவரத்து நடைபெறவில்லை. வேலைநிறுத்தத்தில் பங்கேற்ற தொழிலாளர்களின் ஊர்வலங்கள் அமெரிக்காவை உலுக்கியது. மிச்சிகனில் மட்டும் 40,000 தொழி லாளர்களும், சிக்காகோவில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களும் கலந்து கொண்டனர்.

## சிக்காகோ பேரெழுச்சி

மே 3, 1886 அன்று மெக்கார்மிக் ஹார்வஸ்டிங் மெஷின் நிறுவனத்தின் வாயிலில் 3000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அணிதிரண்டு கண்டனக்கூட்டத்தை நடத்தினர். இங்கு இடம்பெற்ற கலவரத்தில் 4 தொழிலாளர்கள் காவற்துறையினரின் துப்பாக்கிச்சூட்டிற்குப் பலியாயினர். இச்சம்பவத்தைக் கண்டிக்கும் வகையில் ஹே மார்க்கெட் சதுக்கத்தில் மே 4 அன்று மாபெரும் கண்டனக்கூட்டம் ஒன்றை நடத்தினர் தொழிலாளர்கள். 2500 தொழிலாளர்கள் கலந்துகொண்ட இக்கண்டனக் கூட்டம் அமைதி யான முறையில் நடைபெற்றது. இந்நேரத்தில் காவல்துறையினர் அனைவரையும் கலைந்து செல்லு மாறு கூறினர். இவ்வேளையில் திடீரென்று கூட்டத்தில் வெடிகுண்டு வீசப்பட்டதில் அந்த இடத்திலேயே ஒரு காவல்துறையினர் பலியானார். பின்னர் போலீசார் கூட்டத்தினர்மீது துப்பாக்கிச் சூடு நடத்தித் தொழிலாளரைத் தாக்கினர். அத்துடன் தொழிலாளர் தலைவர்களை கைது செய்து வழக்குத் தொடுத்தனர். இந்த வழக்கு ஜுன்-21-1886 அன்று துவங்கியது. 7 பேருக்குத் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது.

## அமெரிக்காவின் கறுப்பு தினம்

நவம்பர் 11, 1887 அன்று தொழிலாளர் தலைவர்கள் ஆகஸ்ட் ஸ்பைஸ், ஆல்பேர்ட் பார்சன்ஸ், அடொல்.ஃப் ஃபிஷர், ஜோர்ஜ் ஏங்கல் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர். நவம்பர்-13-1887 அன்று நடைபெற்ற இறுதி ஊர்வலத்தில் அமெரிக்க தேசமே அணிதிரண்டது.
நாடு முழுவதும் 5 லட்சம் பேர் இவர்களது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டதோடு, அமெரிக்கா முழுவதும் கறுப்பு தினமாக அனுஷ்டிக்கப்பட்டது.
அமெரிக்க தொழிலாளர்களின் 8 மணி நேர வேலைக்கான போராட்டமும், சிகாகோ தியாகிகளின் தியாகமும் தான் இன்றைக்கு மே தினமாக உழைப்பவர் தினமாக நம்முன் நிற்கிறது.

## அனைத்து நாடுகளிலும் மே தினம்

1889 ஜூலை 14 அன்று பாரிஸில் சோசலிசத் தொழிலாளர்களின் *சர்வதேச தொழிலாளர் பாராளு மன்றம்* கூடியது. 18 நாடுகளில் இருந்து 400 பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். பிரெட்ரிக் ஏங்கெல்ஸ் உட்படப் பலர் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் கார்ல் மார்க்ஸ் வலியுறுத்திய 8 மணி நேரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது என்றும், சிக்காகோ சதியை இம்மாநாடு கடுமையாகக் கண்டித்ததோடு, 1890 மே 1, அன்று அனைத்துலக அளவில் தொழிலாளர்கள் இயக்கங்களை நடத்திட வேண்டும் என்றும் அறைகூவல் விடப்பட்டது.
இந்த அறைகூவலே மே முதல் நாளை, சர்வதேச தொழிலாளர் தினமாக, மே தினமாக அனுஷ்டிப்பதற்கு வழிவகுத்தது.

> நாம் எம் எதிரிகளால் தூக்கில் இடப்படுகின்றோம்.
> மரணத்தின் பின்னான எம் கல்லறைகளின் மௌனம்
> பல கதைகள் சொல்லும் !
> இது மே தினத் தியாகிகளின் இறுதி வார்த்தைகள்.

ஆம் உங்களின் கல்லறைகளின் மௌனம் கடந்த 127 வருடங்களாக, அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்திற்கும், விடுதலைக்காகவும், இழந்த உரிமைகளுக்காகவும் போராடும் மக்களுக்கும் பல கதைகளைச் சொல்லியுள்ளன.

> உங்கள் கல்லறைகளின் கதைகளையே
> தேசங்கள் சுதந்திரத்தை விரும்புகின்றன,
> நாடுகள் விடுதலையை விரும்புகின்றன,
> மக்கள் புரட்சியை விரும்புகின்றார்கள்! என்றார் மாவோ

இவைகளே இன்றைய உலகின் பிரதான ஓட்டக் கதைகளுமாகும். இவைகளுக்கூடாக உலக மக்கள் உங்களை என்றும் நினைவு கூர்வார்கள்.

**இலங்கையர் ஒருமைப்பாட்டு மையம்**

**01.05.2013**